இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 19.02.2026

# நிதிச் சீர்வும் மக்கள் வாழ்வும்!

இடைக்கால நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் மாண்புமிகு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு. கடந்த ஐந்தாண்டு காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் எந்த வகையில் எல்லாம் உன்னதமான நிலைக்கு உயர்ந்துள்ளார்கள் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது இடைக்கால நிதிநிலை அறிக்கை.

**தமிழ்நாடு, இந்திய நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக இருக்கிறது. இரட்டை இலக்க உயர் பொருளாதார வளர்ச்சியைத் தமிழ்நாடு எட்டி இருக்கிறது. ஏற்றுமதி தயார் குறியீட்டில் நாட்டில் உள்ள முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. மின்னணு பொருட்கள், மோட்டார் வாகன உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. புத்தொழில் சூழல் தர வரிசையில் முன்னணி மாநிலம். தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிரின் பங்கேற்பு நாட்டிலேயே அதிகம்.**

உயர் கல்விச் சேர்க்கையில் நாட்டிலேயே முதலிடம். தேசிய நிறுவன தர வரிசைக் கட்டமைப்பின் கீழ் இந்திய அளவில் உள்ள 100 உயர் கல்வி நிறுவனங்களில் 17 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருக்கிறது. நிதி ஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்கு குறியீட்டில் தமிழ்நாடு சிறப்பான இடத்தை பெற்றுள்ளது. வறுமைக் குறியீடுகளில் தமிழ்நாடு 1.43 விழுக்காட்டுடன் தேசிய அளவில் குறைவான வறுமைநிலை கொண்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது.

இவை ஏதோ பொருளாதாரப் புள்ளிவிபரமாக மட்டும் பெருமைப்படத் தக்கதாக இல்லாமல் இந்த வளர்ச்சி, ஒவ்வொரு தனிமனிதரையும் எந்தளவுக்கு உயர்த்தக் காரணமாக அமைந்தது என்பதை நிதிநிலை அறிக்கை மனம் குளிரும் வார்த்தைகளாகச் சொல்லி இருக்கிறது.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதம் தோறும் 1.31 கோடி மகளிர் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். இத்திட்டத்தை தேர்தல் நேரத்தில் முடக்க பா.ஜ.க. ஆட்கள் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு தடுக்க நினைத்ததை முறியடிக்கும் வகையில் மூன்று மாதத்துக்கான பணத்தை முன்கூட்டியே வங்கிக் கணக்கில் செலுத்தினார் முதலமைச்சர் அவர்கள். கோடைக்கு குளிர்ச்சி தரும் வகையில் 2 ஆயிரம் ரூபாய் சேர்த்து 5 ஆயிரம் ரூபாயாக வங்கிக் கணக்கில் 6,500 கோடி ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சாதனை இதுவரை செய்யப்பட்டது இல்லை.**

விடியல் பயணம் திட்டத்தால் மாதம் தோறும் மகளிர் 888 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் மகளிரை மகிழ்விக்கிறது விடியல் பயணம் திட்டம். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தால் 2.55 கோடி மக்கள் பயன்பெற்றுள்ளார்கள். 87 லட்சம் பேர் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் பயன் பெற்றுள்ளார்கள். 34 லட்சம் மகளிர் மகப்பேறு திட்ட நிதி உதவி பெற்றுள்ளார்கள். 19 லட்சம் பள்ளிப் பிள்ளைகள் காலையில் சூடான, சுவையான உணவு சாப்பிடுகிறார்கள். 10 லட்சம் மாணவ, மாணவியருக்கு புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். பெற்றோரை இழந்த 10 ஆயிரம் குழந்தைகள் அன்புக்கரங்கள் திட்டத்தால் மாதம் தோறும் 2 ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். 27 லட்சம் குடும்பங்களுக்கு வீட்டுக்கே ரேஷன் பொருட்கள் கொண்டுபோய் தரப்படுகிறது.

**48 லட்சம் மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது. 10 லட்சம் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி கிடைத்துள்ளது. மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை 1500 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 38 அரசு கலைக் கல்லூரிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது. 2 லட்சம் கலைஞர் கனவு இல்லமாக வழங்கப்பட்டுள்ளன. 2 லட்சம் இலவச மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.41 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.19 தோழி விடுதிகள் திறக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்காக மட்டும் 60 அரசாணைகள் போடப்பட்டுள்ளன. 23 லட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப் பட்டுள்ளது.**

இப்படி ஒவ்வொருவருக்கும் பார்த்து பார்த்து நன்மை செய்து வருகிறார் முதலமைச்சர். நிதிநிலைமை சீராக இருந்தால் தான் இத்தனை திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியும்.

“ஏற்றுமதியைப் பெருக்கி, பணவீக்கத்தைக் குறைத்து, உயர் பொருளாதார வளர்ச்சியை அடைந்திட்ட அதே வேளையில் தமிழ்நாட்டில் வறுமையை ஒழிக்கும் இறுதிப் போரையும் நாம் தொடங்கி இருக்கிறோம். மாநிலம் முழுவதும் பரவலான தொழில் வளர்ச்சியை உருவாக்கிட முன் முயற்சிகள் எடுத்தும் பின்னணியில் தொழிலாளர் நலன் காக்கவும் பெருந் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பெருந்தொழில்கள் மட்டுமல்ல சிறு, குறுந் தொழில்கள் வளர்ச்சி அடைய வழிநடத்தி இருக்கிறோம். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக வங்கிக் கடன் தரப்பட்டுள்ளது. மகளிர், மழலையர், முதியோர், தொல் பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் என கடைக்கோடித் தமிழரும் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கு பெறும் சூழல் உருவாகியிருப்பது தனிச் சிறப்பாகும். அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடும் முனைப்பில் நீர் வளம்பெருக்கி உணவு உற்பத்தியில் வரலாறு காணாத சாதனையைச் செய்திருக் கிறோம்.” என்கிறது இந்த அறிக்கை.

**“மக்கள் நல அரசுக்கான இலக்கணத்தை வகுத்திடும் வகையில் நாட்டிற்கே வழிகாட்டும் வரலாற்றுக் கடமையினை நாம் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்படுத்தி வருகிறோம்” என்று தலைநிமிர்ந்து சொல்வதற்கான அனைத்துத் தகுதியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு.**

**நிதியும் வளர்ந்து சீராகி உள்ளது. மக்களின் வாழ்வும் வளர்ந்து மலர்ந்துள்ளது. இதுதான் தமிழ்நாட்டின் தனிச் சிறப்பாகும். அந்த வகையில் நிதிநிலை அறிக்கையானது சமூகநீதியின் அறிக்கையாகவும் அமைந்துள்ளது. பணத்தால் அளவிடப்படுவதாக மட்டுமல்லாமல் விளைவுகளால் அளவிடப்படுவதாக அமைந்துள்ளது இந்த இடைக்கால அறிக்கை.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.2.2026) முகாம் அலுவலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், வரி விதிப்பு மற்றும் நிதி குழுத் தலைவர் திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன் ஆகியோர் சந்தித்து, 2026– 27ஆம் நிதியாண்டிற்கான பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை மாமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதையொட்டி வாழ்த்துப் பெற்றார்கள்.

## திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி

# தமிழ்நாடு கால நிலை உச்சி மாநாடு 4.0!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, பிப். 19–**

**தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0 தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்து, தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரம் (TN–SHORE) எனும் திட்டத்தினை தொடங்கி வைத்து, தஞ்சை மனோராவில், கடற்பசு பாதுகாப்பு மையம் அமைத்திட அடிக்கல் நாட்டினார்.**





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.2.2026) சென்னையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் சார்பில் இரண்டு நாட்கள் (17.02.2026 மற்றும் 18.02.2026) நடைபெறும் “தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0” மாநாட்டினை தொடங்கி வைத்தார்.

### தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரம் (TN–SHORE) எனும் திட்டம்

இந்த மாநாட்டில், TN-SHORE (Tamil Nadu Sustainably Harnessing Ocean Resources and Blue Economy) எனப்படுகின்ற தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரம் எனும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, அத்திட்டத்தின் கீழ்,

34 அலைதாத்திப் பாதுகாப்புக் குழுக்களுக்கான சுழற்சி நிதி மற்றும் குறுங்கடன்களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்த 1.70 கோடி ரூபாயிலிருந்து கிள்ளை - எம்ஜிஆர் நகர் அலையாத்திக் காடுகள் பாதுகாப்புக் குழு, கிள்ளை - கலைஞர் நகர் அலையாத்திக் காடுகள் பாதுகாப்புக் குழு மற்றும் கிள்ளை - சிசில் நகர் அலையாத்திக் காடுகள் பாதுகாப்புக் குழு ஆகிய மூன்று குழுக்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கினார். இந்நிதி, கடலோர சமூக மக்களின் வாழ்வாதாரம் மேம்படவும், பொருளாதாரம் வலுவடையவும் உதவிடும்.

### கடற்பசு பாதுகாப்பு மையம் அமைத்திட அடிக்கல் நாட்டி, தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிதியினை வழங்குதல்

அதனைத் தொடர்ந்து, தஞ்சை மனோராவில், கடற்பசு பாதுகாப்பு மையம் அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். மேலும், கண்ணபிரான் பாலிமர்ஸ், ஊர் கேப்ஸ் மற்றும் ஈசிகோ பவர் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு சுழல் பொருளாதாரம் மற்றும் பசுமை போக்குவரத்து ஆகிய சூழலுக் குகந்த தொழில் முனைவுகளை மேம்படுத்தும் வண்ணம் தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிதியினை வழங்கினார்.

### சுழற்சிப் பொருளாதார மையம் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம்

தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் சென்னையில் சுழற்சிப் பொருளாதார மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னை-இந்தியத் தொழில்நுட்பக் கழகம், ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம் ஆகியவற்றிக்கு இடையே மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு நாட்கள் நடைபெறும் தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாட்டின் முதல் நாளான இன்று, காலநிலை நடவடிக்கையில் தமிழ்நாட்டின் பயணம், துணை தேசிய அளவில் காலநிலை நடவடிக்கைகள், இயற்கை எனும் உட்கட்மைப்பு ஆகிய தலைப்புகளில் குழு விவாதங்கள் நடைபெற்றன. அது மட்டுமல்லாது, சென்னை நகரத்திற்கான நிகழ் நேர சுற்றுப்புற ஒலி அளவீடு மற்றும் ஒலி வரைபடமாக்கல், தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனத்திற்கான வலைதளம், தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப்பொருளாதாரம் (TN-SHORE) திட்ட கண்காணிப்பு வலைதளம், சென்னை படுகைக்கான காலநிலையால் தூண்டப்பட்ட நீர் அபாய மதிப்பீடு மற்றும் நீர் சமநிலை எனும் அறிக்கை, செயற்கை பவழப் பாறைகளால் முன்னெடுக்கப்படும் வான் தீவு மீட்டுருவாக்கத்தின் சமூக, சூழலியல் மற்றும் பொருளாதார மதிப்பீட்டு அறிக்கை மற்றும் தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடாவில் உள்ள கடல் புல்வெளிகளை மையமாகக் கொண்டு சிதைவுற்ற கடலோர ஈர நிலங்களை மீட்டெடுத்தல் ஆகிய அறிக்கைகளும், காலநிலை மீள் திறன்மிகு கிராமத்திற்கான கட்டுப் பாட்டகம் (Dashboard) ஆகியவையும் வெளியிடப்பட்டன.

இந்த மாநாட்டில், நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, இ.ஆ.ப., பொருளாதார வல்லுநர் மாண்டெக் சிங் அலுவாலியா, உலக வங்கியின் தெற்கு ஆசியாவிற்கான பிராந்திய பயிற்சி இயக்குநர் டாக்டர் டினா உமலி - டெனிஞ்சர், ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் இந்தியாவிற்கான் தலைவர் பாலகிருஷ்ண பிசுபதி, முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் ஸ்ரீ நிவாஸ் ரெட்டி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் முனைவர் எம். ஜெயந்தி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர.ராகுல் நாத், தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தின் தலைமைத் திட்ட இயக்குநர் தீபக் எஸ். பில்கி. பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜி. சுந்தரராஜன் உள்ளிட்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் மார்ச் 16ல் மாநிலங்களவை தேர்தல்!

*புதுடெல்லி, பிப்.14-*

*தமிழ்நாட்டில் காலியாகும் 6 மாநிலங்களவை எம்.பி. உள்பட 37 எம்.பி. பதவிகளுக்கு மார்ச் 16ல் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 10 மாநிலங்களில் 37 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு வரும் மார்ச் 16ம் தேதி தேர்தல் நடைபெறும். பிப்.26ம் தேதியன்று இதற்கான அறிவிக்கை வெளியாகும்.*

*வேட்புமனுக்கள் தாக்கல் அன்றைய தினமே தொடங்கும். மார்ச் 5, வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள். மார்ச் 9ல் வேட்புமனுக்கள் வாபஸ் பெற கடைசி நாள். வாக்கு எண்ணிக்கையானது வாக்குப் பதிவு நாளிலேயே நடைபெறும், என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*ஏப்ரல் 26ம் தேதியுடன் 37 மாநிலங்களவை எம்.பி.க்களின் பதவிக் காலம் முடிவடையும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.*

*தமிழ்நாட்டில் தி.மு.க.வின் திருச்சி சிவா, என்.ஆர். இளங்கோ, அந்தியூர்.செல்வராசு, கனிமொழி என்.வி.என். சோமு, அ.தி.மு.க.வின் தம்பிதுரை, அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள த.மா.க.வின் ஜி.கே.வாசன் உள்ளிட்டோரின் பதவிக் காலம் முடிவடைகிறது. இதனால், தி.மு.க. 4 எம்.பி.க்கள், அ.தி.மு.க. 2 எம்.பி.க்களை நிறுத்த வேண்டும்.*

*தமிழ்நாட்டில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.*



நூற்றாண்டுகளுக்கு முன்னர் உயர் வகுப்பாரின் கெடுபிடிகளுக்கு ஆளானவர்கள் கூடித் தங்கள் நலனையும், பாதுகாப்பையும் கருதி, “சென்னை ஐக்கிய சங்கம்” (THE MADRAS UNITED LEAGUE) என்ற அமைப்பைத் தொடங்கி சென்னை ஐக்கிய சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவில், அச்சங்கம் “திராவிடச் சங்கம்” எனப் பெயர் மாற்றி, “திராவிட மாணவர் விடுதி” (DRAVIDIAN STUDENTS HOSTEL) என்ற பெயரில் விடுதி ஒன்றைத் தொடங்கி, அதன் பின்னர் நீதிக் கட்சி அரசுகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சட்டம், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் போன்ற முக்கியமான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழக மக்கள் பெரும் பயன் எய்திட வழிவகுத்த திருமகனார் “திராவிட இயக்கத்தின் தந்தை” எனப் போற்றப்படும் டாக்டர் நடேசனார் அவர்களின் 89வது நினைவு நாளினையொட்டி, நேற்று (18.2.2026), காலை, சென்னை, தியாகராயர் நகர் நடேசனார் பூங்காவில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.